# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2045/17 - 2017 නොවැම්බර් මස 15 වැනි බදාදා - 2017.11.15

*2045/17 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78* (XV)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாக கருதப்படுகின்றதான இலங்கை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பீடங்கள் மற்றும் துறைகளைக் குறித்துரைக்கின்றதான (2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதிய 2028/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாக திருத்தப்பட்டவாறான) 2009 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதிய 1603/35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை இக்கட்டளையால் பின்வருமாறு திருத்துகின்றேன் :-

(1) அட்டவணையின் I ஆம் நிரலில் காணப்படும் “மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்” என்னும் பதிவிற்கு நேரொத்ததாக அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் காணப்படும் “12. மனித இன இயல் துறை” என்னும் பதிவினை உடனடுத்துப் பின்வரும் பதிவினை சேர்ப்பதன் மூலமும் :-

“13. தத்துவம் மற்றும் உளவியல் துறை”

(2) அட்டவணையின் I ஆம் நிரலில் காணப்படும் “பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்” என்னும் பதிவிற்கு நேரொத்ததாக அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் காணப்படும் “9. புள்ளிவிபரவியல் துறை” என்னும் பதிவினை உடனடுத்துப் பின்வரும் பதிவினை சேர்ப்பதன் மூலமும் :-

“10. விளையாட்டு விஞ்ஞானத் துறை”.

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள்
அமைச்சர்.

கொழும்பு,
2017, நவெம்பர் 10.

11- 1317


1A - PG 3760 — 508 (2017/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.